Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal
ISSN: 3049-0723 (Online)

Volume 1, No. 07, April 2025

# Thiruvalluvar's Social Ethical Thoughts on the Abolition of Slavery: A Sociological Perspective

**Ms. Rajendran Krishika**

Sociology and Anthropology Specialization, Eastern University, Sri Lanka

Email Address: kirushi83@gmail.com

**ABSTRACT**

Thiruvalluvar's Thirukkural is a classic social work that embraces all aspects of human life. The social thoughts he presented through Thirukkural, especially the views on the abolition of slavery, are relevant to today's society. From a sociological perspective, slavery, domination, oppression, inequality are discussed in great depth and the main theme is that they should be dismantled and social equality should be established. In this way, the moral values that will abolish slavery and bring about social unity and harmony are prevalent in Thirukkural. It is noteworthy that Thirukkural occupies a high place among the works related to social unity. It cannot be denied that it has remained unique since its inception. This is due to its layered structure and lofty ideas. Its speciality is that Thirukkural is an expression of great thought that guides human development, the prosperity of the human soul, and the progress of the world. These are aimed at expressing human qualities and social life ethics and are aimed at creating a society free from slavery and social equality.

**ARTICLE INFO**

Received : 20 March 2025
Revised : 30 March 2025
Accepted : 01 April 2025

**KEYWORDS**

Thirukkural, Thiruvalluvar, Ethical Thoughts, Sociological Perspective

# அடிமைத்தனம் ஒழிக்க திருவள்ளுவரின் சமூக நெறிமுறை சிந்தனைகள்: ஓர் சமூகவியல் நோக்கு

**செல்வி. ராஜேந்திரன் கிருஷிகா**

1. சமூகவியல் மற்றும் மானிடவியல் சிறப்புக்கற்கை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மின்னஞ்சல் முகவரி: kirushi83@gmail.com

**சுருக்கம்:**

திருவள்ளுவரின் திருக்குறள் என்பது மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் தழுவும் ஓர் உன்னதமான சமூக நூலாகும். திருக்குறளின் மூலமாக அவர் அளித்த சமூக சிந்தனைகள், குறிப்பாக அடிமைத்தனம் ஒழிப்பதற்கான பார்வைகள், இன்றைய சமுதாயத்திற்கும் பொருத்தமானதாக உள்ளன.

சமூகவியல் நோக்கில் அடிமைத்தனம், மேலாதிக்கம், அடக்குமுறை, அசமத்துவம் என்பவை மிகவும் ஆழமாக பேசப்படுவதோடு அவை தகர்த்தெறியப்பட்டு சமூக சமத்துவம் நிலைபெறுவது என்பது முக்கிய தொனிப்பொருள். அவ்வகையிலே அடிமைத்தனத்தை ஒழித்து சமூக ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் அறக்கருத்துக்களே திருக்குறளில் விரவி காணப்படுகின்றன. சமூக ஒற்றுமையுடன் தொடர்புடைய நூல்களின் இடையில் திருக்குறள் உயர்ந்த இடத்தைப் பெறுவது குறிப்பிடத்தக்கது. அது தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை தனித்துவம் மிக்கதாகவே விளங்குகின்றது என்பதை மறுக்க முடியாது. இதற்குக் காரணமாக அதன் அடுக்கமான அமைப்பும், உயர்ந்த கருத்துக்களும் திகழ்கின்றன. மானிட வளர்ச்சி, மனித உள்ளத்தின் செழிப்பு, மற்றும் உலகத்தின் முன்னேற்றம் ஆகியவற்றுக்கு வழிகாட்டும் மாபெரும் சிந்தனையின் வெளிப்பாடாக திருக்குறள் அமைந்துள்ளதையே இதன் சிறப்பு எனலாம். இவை மானிடப் பண்புகளையும் சமூக வாழ்வியல் நெறிமுறைகளையும் வெளிப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளதோடு அடிமைத்தனத்துக்கான விடுதலையை பேணி சமூக சமத்துவத்தையும் ஒடுக்குமுறையற்ற சமூகத்தை உருவாக்குவனவாகவும் அமைந்துள்ளன.

**ஆய்வு நோக்கங்கள்:**

இவ்வாய்வானது திருக்குறளில் வெளிப்படும் அறக்கருத்துக்கள் அடிமைத்தனத்தை இல்லாதொழித்து ஒவ்வொரு தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் அதனை எடுத்தியம்பி சமூக சமத்துவத்தையும், சமூக ஒற்றுமையையும், சமூக நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளது.

**ஆய்வின் முறைமையியலும் தரவு சேகரிக்கும் முறைமையும்:**

இவ்வாய்வானது விவரணப் பகுப்பாய்வாக அமைந்துள்ளது. தரவு சேகரிக்கும் பொருட்டு நூல்கள், கட்டுரைகள், இணையத்தளம், ஏனைய ஆய்வுகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் முடிவுகள்**

இவ்வாய்வின் முடிவுகள் அறக்கருத்துக்களை எடுத்தியம்பி அதன் மூலம் அடிமைத்தனத்தை இல்லாதொழிப்பதற்கான கருவியாக அமைந்துள்ளதை எடுத்தியம்புகின்றன. போராட்டம் நிறைந்த சூழலில் வள்ளுவர் மனித, இனம் உறவுகளை பராமரித்து வாழ்வதற்கான சிந்தனைகளைத் திருக்குறளின் மூலம் எடுத்துரைக்கின்றார். அவற்றில் முக்கியமானவை: விருந்தோம்பல், உரையாடும் விதம், முரண்பாடுகளை சமாளிக்கும் திறன், உதவிசெய்தல், உறவுகள் மேம்படச் செயற்படுதல் போன்ற அனைத்தும் திருக்குறளின் மைய கருத்தாகத் திகழ்கின்றதோடு அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான அறப்போதனை சார் சமூக சிந்தனைகளாக திகழ்கின்றன. அந்தவகையில் இப்பண்புகள் ஒவ்வொன்றிலும் அடிமைத்தனத்தை இல்லாதொழித்து சமூக சமத்துவத்தை பேணும் மனிதநேயப் பண்புகள் எடுத்துக்காட்டப்படுகின்றன.

**விருந்தோம்பல்**

மனித சமுதாயம் உறவுடையதாக அமைய உணவு உபசரிப்பு மிக முக்கியமானது. அந்தவகையில் வள்ளுவர் விருந்தோம்பல் செய்யும் நிலையை மிகச் சிறப்பாக கூறுகிறார்:

**“விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா மருந்து எனினும் வேண்டற்பாற்று அன்று” (82)**

ஒரு மனிதன் தனது உணவை மரணத்தை நீக்கும் மருந்தாகக் கருதினாலும், விருந்தினரை வீட்டிற்கு வெளியே விட்டு, தனக்காக மட்டுமே உண்ணுவது விரும்பத்தக்க செயல் இல்லை. முதலில் விருந்தினரை உறவினராகக் கருதி அவர்களது உறவை வளர்த்துக் கொள்வதே முக்கியம். அவர்களுக்கு உணவளிக்காமல் இருப்பது உறவை அழிக்கச் செய்யும். எனவே வள்ளுவர் விருந்தினரை வெளியில் விட்டு உண்ணக் கூடாது என்கிறார்.

அதுபோலவே வீட்டிற்கு வந்த விருந்தினரை மனதார ஏற்றுக் கொண்டு உபசரிக்க வேண்டும். விருப்பமின்றி முகம் சுழித்து உபசரித்தால் உறவு முறியும் என்பதை:

**“மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து” (90)**

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். விருந்தினர் மகிழ்ச்சியுடன் உணவு உண்ணும் வகையில் உணவை பரிமாற வேண்டும். இல்லையெனில், அவர்கள் "ஏன் வந்தோம்?" என்று எண்ணி மீண்டும் வரமாட்டார்கள்; அதனுடன் உறவும் அழிந்து போய்விடும்.

**பேசும் முறை**

ஒருவர் மற்றொருவருடன் பேசும் முறையில் தான் நட்பும் உறவும் உருவாகின்றன. மனிதன் தவறான முறையில் பேசினால் மறுமுறை அவனுடன் பேச விரும்ப மாட்டார்கள், உறவும் வளராமல் நின்றுவிடும். எனவே வள்ளுவர் பல இடங்களில் பேசும் முறையை குறிப்பிடுகிறார்:

**“யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு” (127)**

மக்கள் மற்றவற்றைப் பற்றி பேசாவிட்டாலும், நாவையாவது காக்க வேண்டும். அதை காக்காவிட்டால், சொற் குற்றத்தால் சிறைத் தண்டனை அடைவார்கள். அதுபோலவே:

“தீயினாற் சுட்ட புண் உள்ளாறு மாறாதே நாவினால் சுட்ட வடு” (129)

ஒருவரை நெருப்பால் சுட்ட புண் உடலில் ஆறிவிடலாம், ஆனால் நாவினால் சொன்ன வார்த்தையின் வடு மனதில் ஆறாது. இதுபோன்ற காரணங்களால், அன்பான, கனிவான பேச்சுக்களை மட்டுமே பேச வேண்டும். அன்பான சொற்கள் உறவுகளை வளர்க்க உதவும்.

**பகைவனை எதிர்கொள்ளும் திறன்**

எதிரிகளை எதிரிக்காகவே கொண்டாடுவது வாழ்க்கையின் வளர்ச்சிக்கு இடையூறாகும். வெற்றி பெற நினைப்பவன் தனது எதிரிகளை நண்பர்களாக மாற்ற வேண்டும். இந்த உயர்ந்த கருத்தை வள்ளுவர் திருக்குறளின் மூலம் நுட்பமாக விளக்குகிறார். உலக வழக்கத்தில் மன்னித்துக் கொள்ளுதல் உறவுகளை மேம்படுத்தும் முக்கியமான வழியாகும் என வள்ளுவர் வலியுறுத்துகிறார்:

*“அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை”* (151)

*"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை*
*மறுத்தல் அதனினும் நன்று”* (152)

தன்னைத் தோண்வாரை விழாமல் தாங்கும் நிலம் போல, தன்னை இகழ்வாரைப் பொறுத்தல் தலைசிறந்த அறமாகும். தீங்கு செய்தவர்களை தண்டிக்காமல் பொறுத்துக் கொள்ளுதல் நீண்டகால நன்மையை உருவாக்கும் என்கிறார்.

*“ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்*
*பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து”* (155)

*"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம், பொறுத்தார்க்குப்*
*போன்றும் துணையும் புகழ்”* (156)

பிறரின் தீமைக்கு பொறுத்துக் கொள்பவர்கள், உலகத்தாரால் மதிக்கப்படுவார்கள். பொறுத்தது ஒருநாள் இன்பத்தை மட்டுமல்ல, நிலையான நன்மையையும் அளிக்கும்.

வள்ளுவர் தமது குறள்களில் உறவுகள் வளர்ச்சி, அமைதி, மற்றும் சமூக நலனுக்கு இத்தகைய மன்னிப்பு நெறிகளை அடிக்கோடாகக் கூறுகிறார். மன்னிப்பின் மூலம் பகைபுரிந்தவர்களுடன் உறவுகள் வளர்த்துக் கொள்ள முடியும். துன்பம் அளித்தவர்கள் காலப்போக்கில் தங்கள் தவறுகளை உணர்ந்து திருந்த வாய்ப்பு கிடைக்கும்.

*"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நான*
*நன்னயம் செய்து விடல்"* (314)

துன்பம் அளித்தவர்களுக்கு நன்மை செய்யும் குணமே உயர்ந்த நெறியாகும். இதனால் அவர்களின் மனம் மாறி உறவு பெருகும்.

**உறவுகளை மேம்படுத்தும் செயல்முறைகளாக வள்ளுவர் இவற்றைக் குறிப்பிடுகிறார்.**

1. **உதவி செய்தல்:**
   பிறருக்குத் தவறின்றி உதவிகள் செய்யும் போது உறவு ஆழமாகத் திகழும்.
   *"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
   *நன்மை கடலிற் பெரிது"* (103)

2. **புறம் பேசாமை:**
   ஒருவரைப் பற்றிய தவறான கருத்துகளை பிறர் முன்னே பேசாமல் நேர்மையாக நடந்து கொண்டால் உறவு வளரும்.
   *"அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே*
   *புறனழீஇப் பொய்த்து நகை"* (182)

3. **அன்பான உரையாடல்:**
   அன்புடன் பேசுவதன் மூலம் நெருங்கிய உறவுகள் உருவாகும்.
   *"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்*
   *சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"* (127)

வள்ளுவர் காட்டும் இந்த உத்திகள் மனித சமூகத்தில் உறவுகளை உறுதிசெய்யும் வழிகளை தெளிவாக கோடிட்டுக் காட்டுகின்றன. அவை இன்று மட்டுமின்றி எதிர்காலத்திலும் சமூக நலனுக்குப் பலனளிக்கும்.

**முடிவுரை**

திருவள்ளுவரின் திருக்குறள் மனித வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களுக்கும் வழிகாட்டும் ஒப்புயர்வு மிகுந்த இலக்கியக் களமாகும். திருக்குறளின் அடிமைத்தனம் ஒழிக்கச் செய்யும் சிந்தனைகள், சமூக நல்லிணக்கம், சமத்துவம், மற்றும் உறவுகளை மேம்படுத்தும் பண்புகளை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளன. விருந்தோம்பல், மன்னிப்பு, அன்பான உரையாடல், மற்றும் உதவி செய்யும் மனோபாவம் ஆகியவை அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான அடிப்படைகளாகவும், மனித வாழ்வின் உன்னத நோக்கங்களை அடைய உதவும் வழிகாட்டுதலாகவும் திகழ்கின்றன.

வள்ளுவர் தமது கற்றல்களால் ஒற்றுமையுடன் கூடிய சமுதாயத்தை உருவாக்கி, மனிதநேயத்திற்கான அடையாளமாக திருக்குறளை அமைத்துள்ளார். இவை அனைத்தும் இன்றைய சமூக சூழலில் பொருந்துவதுடன்

எதிர்கால சமுதாய வளர்ச்சிக்கும் வழிகாட்டுமாயாக விளங்குகின்றன. அடிமைத்தனத்தை ஒழிக்கவும், மனித இனம் ஒற்றுமையாக வாழவும் திருவள்ளுவரின் சமூகவியல் சிந்தனைகள் இன்றும் வாழ்வின் ஒளியாக விளங்குகின்றன.

இவ்வாறான சமூக வாழ்வியல் சிந்தனைகள் அடிமைத்தனத்தை ஒழித்து தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வில் சமூக ஒற்றுமையை போற்றும் வாழ்வியல் நெறிமுறைகளாக அமைந்துள்ளன.

**துணை நூற்பட்டியல்**

**1.** புலியூர்க் கேசிகன் (1986), திருக்குறள், பூம்புகார் பதிப்பகம்.
2. சுப்புரெட்டியார்.ந (2004), வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள், அவ்வை, சென்னை.
3. இராசராம்.மூ (2024), வள்ளுவர் காட்டும் கால மேலாண்மை, புஸ்ரகா டிஜிட்டல் மீடியா.
4. குணா.உ (2019), உலகப் பொதுமறை வள்ளுவம், தொகுதி – 2, உலகத் திருக்குறள் மாநாடு: கோலாம்பூர்-மலேசியா, தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு – 11.
5. துரைஅரங்கசாமி. அ (1985), திருக்குறள்-சிந்தனைகள், சென்னை

**License**

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.